தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,

புதன்கிழமை, 1979 ஏப்ரல் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவைகூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாவட்ட துணை ஆட்சியர் பதவி.

குறுகிய கால வினா எண் 55— திரு ரா. கிருஷ்ணன், திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு தேர்வாணைக்குழுவால், 1978-ல் ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த திரு சந்திரசேகரன், பழங்குடியினர் என்று டிப்டி கலெக்டராகத் தேர்வு செய்யப்பட்டாரா ?

(ஆ) அத்தேர்வு ரத்து செய்யப்பட்ட பிறகு அப்பதவி என்ன ஆயிற்று ?

(இ) அவருக்கு அடுத்து கூடுதல் மதிப்பெண்கள் பெற்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) திரு. கே. சந்திரசேகர் ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான தகவல் இல்லை. ஆனால் அவர் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்த 'காட்டு நாயக்கன்' வகுப்பைச் சேர்ந்தவர் என்று விண்ணப்ப மனுவில் குறிப்பிட்டிருந்தார். அதன் அடிப்படையில் அவர் துணை மாவட்ட ஆட்சியராக 1978ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(ஆ) 1978ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு இடம் நிரப்பப்படாமல் உள்ளது. அவ்விடத்தை 1979ஆம் ஆண்டிற்கு நிரப்ப எடுத்துக் கொள்ளலாம் என அரசு முடிவு எடுத்துள்ளது. அவ்வாறே 1979ஆம் ஆண்டிற்கு தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சார்ந்த ஒருவரை கூடுதலாகத் தேர்ந்தெடுக்குமாறு தமிழ்நாடு அரசு பணி தேர்வாணைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) 1978ஆம் ஆண்டில் திரு சந்திரசேகருக்கு அடுத்து கூடுதல் மதிப்பெண்கள் பெற்ற தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சார்ந்தவருக்கு பதவியளிக்க விதிகள் இடம் தரவில்லை.

[1979 ஏப்ரல் 25

திரு ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த திரு சந்திரசேகர் என்பவர் போலியாக சான்றிதழ் பெற்றிருக்கிறார் என்று இரண்டு மாதங்களுக்கு முன்னால் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்திருந்தது. அதனால் அவர் தேர்வு செய்யப்பட்டது ரத்து செய்யப்பட்டதாகவும் அறிகிறேன். ஆனால் ஏற்கெனவே இப்படிப்பட்ட இந்த ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த பலர் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட சான்றிதழ் பெற்று. எஸ்.சி., எஸ்.டி. கோட்டாக்களில் அவர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். அப்படி போலியாக சான்றிதழ் பெற்றவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா? என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திரு கே. சந்திரசேகர் எனபவர் குருப் ஒன் சர்வீசுக்கு மனுப் போடுகிறபோது தான் 'காட்டு நாயக்கல்' சமூகத்தைச் சேர்ந்தவர் என்று சான்றிதழ் தாசில்தாரிடமிருந்து பெற்றுத் தந்து, தேர்வுக்கு வந்தார். ஆனால் அவருடைய பள்ளி இறுதியாண்டுத் தேர்வு—எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டைப் பார்த்த போது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரா என்று கேள்விக்கு எதிராக 'இல்லை' என்று அதில் இருந்தது. ஆகவே தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழு சந்தேகப்பட்டு. அது சம்பந்தமாக ஆராய்ந்தபோது அத்தகைய காட்டு நாயக்கன் சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல என்பது தெளிவாகியது. அதனால் அவருடைய தேர்வு ரத்து செய்யப்பட்டு, மேலும் 3 ஆண்டுகளுக்கு தேர்வாணைக் குழு மூலம் நடைபெறும் தேர்வுகளில் திரு சந்திரசேகர் கலந்துகொள்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. வேறு ஏதாவது இப்படி இருந்தால், அரசின் கவனத்திற்கு கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்,

திரு வி. கே. கோதண்டராமன்: சார். இப்படி வசதி படைத்த பலர் போலி சான்றிதழ்களைப் பெற்று. தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு போலீசாரோ மற்றவர்களோ கண்டு பிடித்து சொன்னதற்கு பிறகு நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருந்து வருகிறது. கண்டுபிடித்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கக்கூடிய இதைப்போன்ற பலர் டாக்டர்களாக இருக்கிறார்கள். பலர் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள்; என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இல்லை என்று சொன்னால் இதற்குப் பிறகாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்; தலைவரவர்களே. அத்தகைய சான்றிதழ் தந்த அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டுள்ளது.

(திரு ரா. கிருஷ்ணன் எழுந்தார்.)

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வியை கொடுத்தவர் ஒருமுறை துணைக் கேள்வி கேட்ட பிறகு மீண்டும் கேள்வி கேட்க வேண்டுமென்று கட்டாயம் இல்லை. இந்தக் கேள்வி ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றியது. எல்லாவற்றுக்கும் விளக்கமாகப் பதிலும் வந்துவிட்டது. இரண்டாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, ஏற்கெனவே ஒரு தேர்வு செய்யப்பட்டதை 'வேக்கண்டாக' வைக்க வேண்டிய அவசியம் என்ன? திரு. சந்திரசேகர் தேர்வு ரத்து செய்யப் பட்டுவிட்டதால் அவருக்கு அடுத்தபடியாக அதிக மார்க் வாங்கிய வரை அந்த இடத்தில் நியமிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அந்த ஏற்பாட்டைச் செய்ய இப்போது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த நிலையில் அத்தகைய ஒரு காலியிடம் ஏற்பட்டால் அது அப்படியே ரத்தாகிவிடும். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் 1977-ம் ஆண்டு அதைப் பரிசீலனை செய்தது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டிய விகிதங்கள் இதில் கிடைப்பதில்லை என்கின்ற காரணத்தால் ஓராண்டு அல்லது ஒருமுறை இத்தகைய தேர்வுகள் நடைபெறுகின்ற போது போதுமான தாழ்த்தப்பட்ட மக்கள் வரவில்லை என்றால் அந்த இடங்களை அடுத்த முறை தேர்வு நடைபெறுகிறபோது சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விதிகளைத் திருத்தி இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள், அந்த ஆண்டே அதிகமான மார்க் வாங்கிய இன்னொரு தாழ்த்தப்பட்ட மாணவர் இருந்திருப் பாரேயானால் அவருக்குக் கொடுக்கலாமே என்று கேட்கிறார், அதற்கு விதிகளிலே இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு,

வினா எண் 733—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் மூன்று சதவீத இடங்களை ஒதுக்கியுள்ளது போல் மாநில அரசும் ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) உடல் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக் கீடு செய்யும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.